DEPOSITION OF WITNESS

**In the Court of III Additional District and Sessions Judge, Tiruchirappalli.**

**Session Case No. 13/2021**

**Present – B.Saravanan, B.Sc.B.L,**
**III Additional District and Sessions Judge, Tiruchirappalli.**

Prosecution witness

(Chapter XXIII Code of Criminal Procedure)

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | **நாகராஜன்** | Caste | : | |
| Father Name | : | **கலியன்** | Calling | : | |
| Village | : | | Religion | : | |
| Taluk | : | | Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the day of **25.02.2026.**

**PW - 16**

**(1** முதல் **3** எதிரிகள் ஆஜர்**)**

**முதல் விசாரணை**

நான் திருச்சி மாவட்டம், இலால்குடி தாலுக்கா, பெருவளநல்லூரில் குடியிருக்கிறேன். நான் விவசாய வேலை செய்கிறேன். கடந்த 2020 ஆம் ஆண்டு 16 ஆம் தேதி அன்று ஒரு வேலையாக இலால்குடி காவல்நிலையத்திற்கு நானும், சாட்சி இந்திராவும் போயிருந்தோம். அங்கு காவல்நிலையத்தில் 2 ஆம் எதிரி கவியரசனை கிராம நிர்வாக அலுவலர் ஒப்படைத்தார். போலிசார் 2 ஆம் எதிரியை கைது செய்தார்கள். என்னிடம் போலிசார் 2 ஆம் எதிரி கவியரசனை கைது செய்ததற்காக சாட்சி கையொப்பம் கேட்டார்கள், நான் போட்டுக் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் 2 ஆம் எதிரியின் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள முதல் கையொப்பம் என்னுடையதுதான். அந்த கையொப்பம் **அதசாஆ.7** ஆகும். பின்பு 2 ஆம் எதிரி கவியரசனை விஏஓ–வுடன் அழைத்து சென்றார்கள். நானும், இந்திராவும்

போனோம். பெரியசாமி வீடு அருகே கூட்டிப்போனார்கள். அங்கேயும் போய் ஒரு கையொப்பம் போட்டோம். சாட்சிக்காக கையொப்பம் போட்டோம். என்னிடம் காட்டப்படும் 16.06.2020 தேதியிட்ட துண்டு கைப்பற்றியதற்காக கைப்பற்றுதல் மகசரில் உள்ள முதலாவது சாட்சி கையொப்பம் என்னுடையதுதான். அந்த கையொப்பம் மட்டும் **அதசாஆ.8** ஆகும். ஆஜர் 2 ஆம் எதிரிதான் கவியரசன் ஆவார். பிறகு விஏஓ, என்னை பல்லபுரம் கத்தரிக்காய் ரோடு அருகே அழைத்து சென்றார். அங்கு 1 ஆம் எதிரி தமிழ்செல்வனை போலிசார் கைது அழைத்து சென்றார்கள். ஆஜர் 1 ஆம் எதிரிதான் தமிழ்செல்வன் ஆவார். என்னிடம் காட்டப்படும் 1 ஆம் எதிரி ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள முதலாவது சாட்சி கையொப்பம் என்னுடையதுதான். அந்த கையொப்பம் மட்டும் **அதசாஆ.9** ஆகும். என்னிடம் காட்டப்படும் 16.06.2020 தேதியிட்ட 1ஆம் எதிரியிடம் தடயங்கள் கைப்பற்றியதற்கான மகசரில் உள்ள முதலாவது சாட்சி கையொப்பம் என்னுடையதுதான். அந்த கையொப்பம் மட்டும் **அதசாஆ.10** ஆகும். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

*(அரசு தரப்பில் சாட்சியை பிறழ்சாட்சியாக கருதி குறுக்குவிசாரணை செய்ய அனுமதி கோரப்பட்டது. ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டு அனுமதி அளிக்கப்பட்டது)*

<u>அரசு தரப்பில் குறுக்குவிசாரணை</u>

போலிசார் என்னை விசாரித்தபோது, 16.06.2020 அன்று நானும், இந்திராவும் இலால்குடி காவல்நிலையத்திற்கு சென்றோம், அப்போது 2 ஆம் எதிரி கவியரசன் போலிசாரிடம் வாக்குமூலம் கொடுத்தார். அதில்தான் நானும், இந்திராவும் கையொப்பமிட்டோம். பின்பு போலிசார் மற்றும் நாங்களும் 2 ஆம் எதிரி கவியரசனுடன் சென்று 2 ஆம் எதிரி கவியரசன் வீட்டின் அருகிலிருந்த வைக்கோல் போரிலிருந்து துண்டை எடுத்து ஆஜர் செய்தார் என்றால் சரிதான். அதை ஆய்வாளர் மகசரில் கைப்பற்றி எங்கள் இருவரிடமும் சாட்சி கையொப்பம்

வாங்கினார் என்றால் சரிதான். போலிசார் எங்களை அழைத்துக் கொண்டு பல்லபுரம் கத்தரிக்காய் பெருவளவாய்க்கால் பாலம் அருகே எங்கள் முன்னிலையில் 1 ஆம் எதிரி தமிழ்செல்வனையும், 4 ஆம் எதிரியான இளவரையும் கைது செய்தார்கள் என்றால் சரிதான். 1 ஆம் எதிரி தமிழ்செல்வன் போலிசாரிடம் வாக்குமூலம் கொடுத்தார், அதில்தான் நான் சாட்சி கையொப்பம் போட்டேன். 1 ஆம் எதிரி தமிழ்செல்வன், வடக்கு புதுத்தெரு, சாவடியில் உள்ள தாழ்வாரத்திலிருந்து ஒரு அருவாளை எடுத்து ஆஜர் செய்தார் என்றும், அந்த மகரில்தான் நாங்கள் கையொப்பம் செய்தோம் என்றால் சரிதான். அந்த துண்டையும், அருவாளையும் பார்த்தால் சொல்லமுடியும், நீண்டகாலமாகிவிட்டது. என்னிடம் காட்டப்படும் துண்டுதான் அதுவாகும். அந்த துண்டு ஏற்கனவே அதசாஆ.1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. என்னிடம் காட்டப்படும் அருவாளை என்னால் அடையாளம் காண இயலவில்லை. ஆய்வாளரிடம் மேற்கண்ட விபரங்களை வாக்குமூலமாக சொன்னேன் என்றால் சரிதான்.

<u>1 முதல் 3 எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை</u>

இறந்துபோன பெரியசாமி எனக்கு சம்மந்தி என்றால் சரிதான். அசா.1 குணசேகரன் எனது மருமகன் என்றால் சரிதான். அன்றைய தினம் காவல்நிலையத்திற்கு நானும், என் மருமகனும் ஒன்றாகதான் போனோம் என்றால் சரிதான். நான் கையெழுத்துப்போட்டது எதற்காக போட்டேன் என்று தனித்தனியாக எனக்கு தெரியாது என்றால் சரிதான். நான் சொன்ன நாளில், நேரத்தில், இடத்தில் எதிரிகள் யாரையும் கைது செய்யவில்லை என்றும், அவர்கள் எந்த வாக்குமூலமும் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. அதன் அடிப்படையில் எந்த தடயங்களும் கைப்பற்றவில்லை என்றால் சரியல்ல. இறந்தவரும், அவரது மகனான அசா.1 –ம் எனக்கு நெருங்கிய உறவினர்கள் என்பதால் அவர்கள் அழைத்தன்படி காவல்நிலையத்திற்கு போய் கையொப்பம் மட்டும் போட்டேன் என்றால் சாட்சி முதலில் ஆமாம் என்று கூறிவிட்டு,

பார்த்ததை கூறினேன் என்கிறார். நான் போலிசார் சொல்லிக் கொடுத்து பொய் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை** – இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு கூறப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காட்டி சரியென்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

மூன்றாவது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,
திருச்சிராப்பள்ளி.